தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தமிழகத்தில் மழை தொடரும்: வானிலை ஆய்வு மையம் தகவல்</u>**

இந்திய பெருங்கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை நீடித்துள்ளதால் தென் தமிழகம் மற்றும் வட தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் தெரிவித்துள்ளார்.

**<u>142 அடியை எட்டியது முல்லைப் பெரியாறு</u>**



முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நள்ளிரவில் 142 அடியை எட்டியது. இதன்மூலம், அணையில் இந்த உயரத்துக்கு நீரைத் தேக்க உச்ச நீதிமன்றம் அளித்திருந்த அனுமதியின்படி தமிழகத்தின் உரிமை நிலைநாட்டப்பட்டுள்ளது. முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை காலை 142 அடியை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப் பட்டது. இந்த நிலையில், நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை நின்றதால், அணைக்கு நீர்வரத்தும் குறைந்தது. புதன்கிழமை மாலை 928 கன அடியாக இருந்த நீர்வரத்து, வியாழக்கிழமை காலை 772 கன அடியாகக் குறைந்தது. வியாழக்கிழமை காலை நிலவரப்படி, அணையின் நீர்மட்டம் 141.75 அடியாக இருந்தது. மாலையில் அணையின் நீர்மட்டம் 141.85 அடியாக உயர்ந்தது. அணையின் மொத்த நீர் இருப்பு 7,599 மில்லியன் கன அடியாக இருந்தது. 142 அடி இலக்கை எட்ட, 0.15 அடி மட்டுமே இருந்த நிலையில், வியாழக்கிழமை பகல் 11.30 மணி முதல் தமிழகத்துக்கு, குடிநீருக்காக

திறந்துவிடப்பட்ட தண்ணீர் முற்றிலும் நிறுத்தப்பட்டது. இதையடுத்து, அணையின் நீர்மட்டம் உயர்ந்து, வியாழக்கிழமை நள்ளிரவில் 142 அடி இலக்கை எட்டியது. ஆட்சியர் ஆய்வு: அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டியதையடுத்து, மதுரை வைகை-பெரியாறு பொதுப் பணித் துறை செயற் பொறியாளர் ராஜேஷ், அணையின் செயற் பொறியாளர் மாதவன், உதவிச் செயற் பொறியாளர் சௌந்தரம் உள்பட பொறியாளர்கள், அணையில் முகாமிட்டு கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தேனி மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி வியாழக்கிழமை மாலை அணைக்கு நேரில் சென்று ஆய்வு செய்தார். கேரள மாநில கூடுதல் தலைமைச் செயலர் ஆய்வு: இதனிடையே, வியாழக்கிழமை மாலை பெரியாறு அணையில், கேரள அரசின் கூடுதல் தலைமைச் செயலரும், மூவர் கண்காணிப்புக் குழுவில் இடம் பெற்றுள்ள, கேரள அரசின் பிரதிநிதியுமான குரியன், கேரள அணைகள் பாதுகாப்பு ஆணையத்தின் ஆலோசகர் எம்.கே.பரமேஸ்வர நாயர், கேரள நீர்ப்பாசனத் துறை செயற் பொறியாளர் ஜார்ஜ் டேனியல் உள்பட நீர்பாசனத் துறை அதிகாரிகளும், முல்லைப் பெரியாறு அணையில் ஆய்வு மேற்கொண்டனர். இடுக்கி எம்.பி. ஆய்வு: இடுக்கி மக்களவை உறுப்பினர் ஜாய்ஸ் ஜார்ஜும் அணையில் ஆய்வு மேற்கொண்டார்.

**35 ஆண்டுகளுக்கு பிறகு...**

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 35 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது 142 அடியை எட்டியுள்ளது. பெரியாறு அணையில் கடந்த 1972 ஜனவரி 2-ஆம் தேதி 142.45 அடி வரை தண்ணீர் தேக்கப்பட்டது. 1975 அக்டோபர் 12-இல் 143.30 அடி வரையும், 1977 நவம்பர் 4-ஆம் தேதி 146.70 அடி வரையும், 1979 நவம்பர் 4-ஆம் தேதி 143.70 அடி வரையும் தண்ணீர் தேக்கப்பட்டது. கடந்த 1980-ஆம் ஆண்டு முதல் அணையின்

நீர்மட்டம் 136 அடிக்கு மேல் உயராமல் பராமரிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு 2014 நவம்பர் 1-ஆம் தேதி அணையின் நீர்மட்டம் 136.30 அடியாக உயர்ந்தது. நவம்பர் 20-ஆம் தேதி இரவு 142 அடியை எட்டியுள்ளது.

**நவம்பர் 1ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை அணையின் நீர்மட்டம் விவரம்**

1 136.30

2 137

3 137.30

4 138

5 138.10

6 138.10

7 138.20

8 138.40

9 138.60

10 138.70

11 138.90

12 139.20

13 139.50

14 140

15 140.80

16 141

17 141

18 141.08 19 141.30

20 142

## விதைப் பண்ணைகள் மூலம் கூடுதல் மகசூல்

விதைப்பண்ணைகள் அமைப்பதன் மூலம், விவசாயிகள் கூடுதல் மகசூல் பெறலாம் என விதைச்சான்று இயக்குநர் ராதாகிருஷ்ணன் புதன்கிழமை தெரிவித்தார். விவசாயிகளுக்கு தரமான விதைகளை வழங்கும் நோக்கில், விதைச்சான்று துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நெல், தட்டைப் பயிறு, உளுந்து, நிலக்கடலை உள்ளிட்ட பயிர்களுக்கு விதைப் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், விதைச்சான்று இயக்குநர் ராதாகிருஷ்ணன், திண்டுக்கல் விதைச் சான்று உதவி இயக்குநர் அலுவலகத்திலும், ஆத்தூர் அடுத்துள்ள சித்தையன்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள தட்டைப் பயறு விதைப்பண்ணையிலும் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர் தெரிவித்தது: சாதாரண சாகுபடி மூலம் பெறுவதைவிட, விதைப்பண்ணை மூலம் கூடுதல் மகசூல் பெற முடியும். 2 சதவீத டிஏபி கரைசல், தமிழ்நாடு வேளாண்மை பல்கலை. மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பயறு வளர்ச்சி ஊக்கி ஆகியவற்றை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் நல்ல வேர் வளர்ச்சி, சீரான பூக்கள், வறட்சியைத் தாங்கும் தன்மை மற்றும் திரட்சியான காய்களை பெறுவதற்கும் வாய்ப்பு ஏற்படும். நெல், நிலக்கடலை மற்றும் பயறு வகைகள் உள்ளிட்ட பயிர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களை

பயன்படுத்தி, கூடுதல் மகசூல் பெற்று விவசாயிகள் பயனடைய வேண்டும். திண்டுக்கல் மாவட்டத்துக்கு, கடந்த சில நாள்களில் கூடுதல் மழைப் பொழிவு கிடைத்துள்ளதால், அதிக விதைப்பண்ணைகளை அமைக்க விவசாயிகள் முன்வர வேண்டும் என்றார். ஆய்வின்போது திண்டுக்கல் மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் பெ.விஜயராணி, விதைச்சான்று அலுவலர் ஜெயச்சந்திரன், உதவி விதை அலுவலர்கள் சாந்தி, ஆண்டிச்சாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## <u>சின்னமனூர் பகுதியில் கம்பு விளைச்சல் அமோகம்</u>

சின்னமனூர் பகுதியில் மானாவாரியாக விளைவித்த கம்பு நல்ல விளைச்சல் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சின்னமனூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள எரசக்கநாயக்கனூர், அப்பிபட்டி, வெள்ளையம்மாள்புரம், சீப்பாலக்கோட்டை, கன்னிச்சேர்வைபட்டி என 20க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்கு சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நன்செய் மற்றும் புன்செய் விவசாயம் நடைபெற்று வந்தது. கடந்த அக்டோபர் மாதத்தில் தொடங்கிய வடகிழக்கு பருவமழையால், இப்பகுதி விவசாயிகள் மானாவாரி பயிர்களை பயிரிட்டிருந்தனர். பருவ மழையில் தீவிரமடைந்ததால், போதுமான தண்ணீர் கிடைத்ததையடுத்து, பயிர்கள் நல்ல வளர்ச்சி அடைந்துள்ளன. குறிப்பாக கம்பு நல்ல விளைச்சல் கண்டுள்ளது. இன்னும் ஒரு மாதத்தில் அறுவடைக்கு தயாராகி விடும் நிலையில் உள்ளதால், இந்தாண்டு கூடுதல் மகசூல் கிடைக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**<u>நீலகிரி மாவட்டத்தில் பயிர்க் கடனாக ரூ. 307 கோடி விநியோகம்</u>**

நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் பயிர்க் கடனாக ரூ. 307 கோடி வழங்கப்பட்டுள்ளதாக உதகையில் நடைபெற்ற கூட்டுறவு வார விழா நிகழ்ச்சியில் தெரிவிக்கப்பட்டது. உதகையில் அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நிகழ்ச்சிகள் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்ற மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் பேசியதாவது: மாநிலத்தில், மக்கள் பங்களிப்புடன் இயங்கும் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்கள் சிறப்பான முறையில் செயலாற்றி வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் 143 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றின் மூலமாக கடந்த 4 ஆண்டுகளில் பயிர்க் கடனாக சுமார் 70,000 விவசாயிகளுக்கு ரூ. 307 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில், குறிப்பிட்ட தவணைக்குள் கடன் தொகையை திருப்பிச் செலுத்துவோருக்கு 7 சதவீதம் வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதுதவிர, 1,249 மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளதுடன், நகைக் கடனாக ரூ. 911 கோடி வழங்கப்பட்டுள்ளது என்றார். இந்நிகழ்ச்சியில், மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.அர்ஜுனன், மக்களவை உறுப்பினர் சி.கோபாலகிருஷ்ணன், ஆவின் தலைவர் அ.மில்லர், நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத் தலைவர் கண்ணபிரான், மாவட்ட ஊராட்சித் தலைவர் மேனகா, உதகை ஊராட்சி ஒன்றியத் தலைவர் சாந்தி, நகர்மன்றத் தலைவர் சத்தியபாமா உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர். முன்னதாக மண்டல கூட்டுறவு இணைப் பதிவாளர் முருகன் வரவேற்றார். இதையடுத்து, ரூ. 5.5 கோடி மதிப்பிலான நலத்திட்டம், கடனுதவிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து,

95 ஆண்டுகள் பழமை வாய்ந்த உதகை நகரக் கூட்டுறவு வங்கிக்கு சிறந்த சேவைக்கான விருதும் வழங்கப்பட்டது. மேலும், மாவட்டத்தில் உள்ள சிறந்த கூட்டுறவு அமைப்புகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. சரக துணைப் பதிவாளர் வாசுதேவன் நன்றி கூறினார்.

## "நடவுமுறை துவரை சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறலாம்'

நடவுமுறை துவரை சாகுபடி மூலம் கூடுதல் மகசூல் பெறலாம் என்றார் வேளாண்மை இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான். ஆலங்குடி அருகேயுள்ள மைக்கேல்பட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் மூலம் செயல்பட்டுவரும் துவரை நடவு செயல்விளக்கத்தை புதன்கிழமை ஆய்வுசெய்து மேலும் அவர் பேசியது: துவரை சாகுபடியை ஊக்கப்படுத்தும் நோக்கில், இந்த சாகுபடியில் நாற்றுவிட்டு நடும் புதிய தொழில்நுட்பம் திருவரங்குளம் வட்டாரத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது. நடவு துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு விதை, பாலித்தீன் பை, நுண்சத்து, பூச்சி மருந்து உள்ளிட்ட இடுபொருட்கள் ரூ. 7500 மதிப்பில் முழு மானியத்தில் வழங்கப்படுகிறது. 120 நாள் வயதுடைய கோ.ஆர்.ஜி-7 என்ற ரக விதைகள் வழங்கப்பட்டுள்ளன. உரிய காலத்தில் நடவு செய்து முறையான பயிர் மேலாண்மை மற்றும் பூச்சி நோய் மேலாண்மையை கடைப்பிடித்தால், ஏக்கருக்கு 2000 கிலோ வரை மகசூல் பெறலாம். இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் துவரை விதைகளை அரசே கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்ய உள்ளது என்றார் அவர். ஆய்வின்போது, வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை பேராசிரியர் பசுபதி, உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் சாந்தி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**மதுக்கூரில்** 10.4 **மி.மீ. மழை**

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக மதுக்கூரில் 10.4 மி.மீ. மழை பெய்தது. மாவட்டத்தில் வியாழக்கிழமை பகலில் பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தில் வியாழக்கிழமை மாலை 4 மணி வரை பதிவான மழையளவு (மில்லிமீட்டரில்): மதுக்கூர் 10.4, குருங்குளம், பேராவூரணி தலா 4, வெட்டிக்காடு 3, அதிராம்பட்டினம் 2.1, நெய்வாசல் தென்பாதி 2, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை தலா 1.

**திருவாரூரில்** 12.40 **மி.மீ மழை**

திருவாரூரில் புதன்கிழமை 12.40 மில்லி மீட்டர் மழை பதிவானது.

திருவாரூர் மாவட்டத்தில் கடந்த இரு நாள்களாக பருவமழை சற்று ஓய்ந்த நிலையில், புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக புதன்கிழமை இரவிலிருந்து மழை பெய்யத் தொடங்கியுள்ளது. வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருவாரூரில் 12.40 மில்லி மீட்டர் மழை பெய்தது. இந்த மழை சம்பா பயிர்களுக்கு சாதகமாக இருப்பதாக விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர். வியாழக்கிழமை காலையிலிருந்து விட்டுவிட்டு மழை பெய்தது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பண்ணை வயலில் பூச்சி கட்டுப்பாடு நடவடிக்கை

ஆர்.கே.பேட்டை: பொன்னி விதை நெல் வயலில், தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பயிர் வளர்ச்சி மற்றும் பூச்சி கட்டுப்பாடு குறித்து, வேளாண் அதிகாரிகள், விவசாயிகளுக்கு கள பயிற்சி அளித்தனர். ஆர்.கே.பேட்டை வட்டாரத்தில், சான்று நிலை விதை நெல்லை, விவசாயிகளுக்கு வினியோகம் செய்வதற்காக, வெள்ளாத்துார் அருகே, ஐந்து ஏக்கர் பரப்பளவில், வெள்ளை பொன்னி, விதை பண்ணை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பண்ணை வயலில் இருந்து கிடைக்கும் விதை நெல், வரும் தை பட்டத்தில் அறுவடைக்கு வரும். விதையில் கலப்பு மற்றும் களை இல்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, பண்ணை வயல், தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. நேற்று, ஆர்.கே.பேட்டை வேளாண் உதவி இயக்குனர் முகமது ரபீக், விதை சான்று உதவி இயக்குனர் பிரதீப்குமார் சிங், பண்ணை வயலில் கள ஆய்வு மேற்கொண்டனர். விவசாயிகளுக்கு பண்ணை வயல் பராமரிப்பு குறித்து அறிவுரை வழங்கினர். தொடர்ந்து, விதை சுத்திகரிப்பு நிலையத்தையும் பார்வையிட்டனர். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை, பூச்சி கட்டுப்பாடு நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

**<u>தமிழகத்தில் உரத்தட்டுபாடு இல்லை : கூட்டுறவு துறை அமைச்சர் தகவல்</u>**

திருவண்ணாமலை: "தமிழகத்தில் உரத்தட்டுப்பாடு இல்லை," என்று, திருவண்ணாமலையில் நடந்த கூட்டுறவு வார விழாவில், கூட்டுறவு துறை அமைச்சர் செல்லூர் ராஜூ கூறினார். திருவண்ணாமலையில், 61வது கூட்டுறவு மாநில அளவிலான வாரவிழா நேற்று கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு, கூட்டுறவு துறை அமைச்சர் செல்லூர் ராஜூ தலைமை வகித்தார். கலெக்டர் ஞானசேகரன் முன்னிலை வகித்தார், நிகழ்ச்சியில், அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி, அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கிர்லோஷ்குமார், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய தலைவர் அமுதா அருணாசலம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விழாவில், அமைச்சர் செல்லூர் ராஜூ பேசியதாவது: தமிழகத்தில், முதன் முதலில், கூட்டுறவு சங்கம், திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கப்பட்டு, படிப்படியாக தமிழகம் முழுவதும் தொடங்கப்பட்டது. 1998ம் ஆண்டு தி.மு.க., ஆட்சியில் கூட்டுறவு தேர்தல் நடத்தி, அதன் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு கூட்டுறவு சங்கங்களில் வரவுக்கு மேல் செலவு செய்து, முறைகேட்டில் ஈடுபட்டு கூட்டுறவு சங்கங்களை நலிவடையச் செய்தனர்.மீண்டும், அ.தி.மு.க., ஆட்சிக்கு வந்தவுடன், கூட்டுறவு துறை சீர்திருத்தம் செய்யப்பட்டு, நிர்வாகம் சீர் செய்யப்பட்டது. தற்போது, கூட்டுறவு சங்கங்கங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள், தவறுகள் செய்யாமல், தகுதி உள்ளவர்களுக்கு கடன் வழங்க வேண்டும். தமிழக விவசாயிகளுக்கு, ஆண்டுக்கு ஒரு லட்சத்து, 56ஆயிரம் மெட்ரிக் டன் உரம் வழங்க வேண்டும். இந்நிலையில், கடந்த ஆறு மாதத்தில் ஒரு லட்த்து, 23 ஆயிரம் மெட்ரிக் டன் உரம் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில்,

உரத்தட்டுப்பாடு இல்லை. காய்கறிகளை பதுக்கலில் ஈடுபட்டு, அதிக விலைக்கு விற்பதை தடுத்து விவசாயிகள் நேரடியாக பயன்பெறும் வகையில், கூட்டுறவு சங்கம் மூலம், 53 காய்கறி கடைகள் திறக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு மக்களுக்கு குறைந்த விலையில், விற்பனை செய்யப்பட்டது. விவசாயிகளுக்கு, நகை கடனாக ஒரு கோடியே, ஏழு லட்சத்து, 601 கோடி ரூபாய் வழங்கப் பட்டுள்ளது. ரேஷன் கடையில் எடை குறைவை தடுக்க, மின் தராசு வைக்கப்பட்டது. தமிழகத்தில், 4,705 கூட்டுறவு வங்கிகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. மேலும், 109.99 கோடி கூட்டுறவு வங்கிகளில் டிபாஸிட் மூலம் வருவாய் பெறப்பட்டுள்ளது. கூட்டுறவு துறையை லாபத்தில் இயக்க வைத்து, ஊழியர்களுக்கு கூடுதலாக சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பேசினார்.

## வேளாண்மை தொழில்நுட்ப வார விழா விவசாயிகள் பயன்பெற வேண்டுகோள்

பனமரத்துப்பட்டி : சேலம் மாவட்ட விவசாயிகளுக்கு, நவீன வேளாண் தொழில் நுட்ப விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 24 முதல் 28ம் தேதி வரை தொழில்நுட்ப வார விழா நடக்கிறது. முதல் நாளில், பயிர் பாதுகாப்பு, உழவர்களின் உரிமைசட்டம், பண்ணை இயந்திரவியல், சொட்டு நீர் பாசனம், இரண்டாம் நாளில், சுற்றுப்புற சூழலை பாதிக்காத பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பங்கள், சிறுதானியங்களில் மதிப்பு கூட்டும் பொருட்கள் தயாரித்தல், மூன்றாம் நாளில், வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர் தொழில் நுட்பங்கள், நான்காம் நாளில், ஒருங்கிணைந்த பண்ணை திட்டம், கால்நடை முகாம், சிறுதானியங்கள் உற்பத்தி, சந்தை படுத்துதல், ஐந்தாம் நாளில், மண்

மற்றும் நீர் பரிசோதனை, வறட்சியை தடுக்கும் உத்திகள் போன்ற தொழில்நுட்பங்கள், செயல்முறை விளக்கம் நடைபெறுகிறது.தமிழ்நாடு வேளாண் பல்கலை கழக இயக்குநர்கள், வேளாண்துறை அதிகாரிகள், விஞ்ஞானிகள், முன்னோடி விவசாயிகள் பங்கேற்கும், தொழில் நுட்ப பயிற்சி, செயல்விளக்கம், கலந்துரையாடல் நடக்கிறது. இதில், சேலம் மாவட்ட விவசாயிகள் தவறாமல் கலந்து கொண்டு, அனைத்து வயல்வெளி பிரச்னைகளுக்கும் தீர்வை தெரிந்து கொண்டு பயன்பெற வேண்டும்.இத்தகவலை, திட்ட ஒருங்கிணைப்பாளர் மகேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

## நாமக்கல்லில் பருத்தி ஏலம்

நாமக்கல் : நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 1.30 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.) திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 20க்கும் மேற்பட்ட விவசாயிகள், 110 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.ஆர்.சி.எச்., ரகம் அதிக பட்சமாக, 4,126, குறைந்த பட்சமாக, 4,050 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 1.30 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது. திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, ஆகிய பகுதியைச் சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

## சின்ன வெங்காயம் ஏலம்

திருச்சி: துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், 12 ஆயிரத்து 682 ரூபாய்க்கு, சின்ன வெங்காயம் ஏலம் போனது. திருச்சி மாவட்டம், துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத் துக்கு, 20 மூடைகளில், 1,419 கிலோ சின்ன வெங்காயம் ஏலத்துக்கு வந்தது. அதிகப்பட்சமாக ஒரு கிலோ சின்ன வெங்காயம், 21 ரூபாய்க்கும், சராசரியாக, 16 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம், 12 ஆயிரத்து 682 ரூபாய்க்கு, சின்ன வெங்காயம் ஏலம் போனது. இதில், ஐந்து விவசாயிகள் பங்கேற்றனர். உப்பிலியாபுரம், பி. மேட்டூர், வடக்கிப்பட்டி, கீரம்பூர் ஆகிய பகுதிகளில் இருந்து சின்ன வெங்காயம் விற்பனைக்கு வந்தது. நாமக்கல், மன்னார்குடி, அம்மாப்பாளையம், முசிறி, தாத்தையார்பேட்டை, துறையூர் ஆகிய பகுதிகளில் இருந்து, எட்டு வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்றனர்.

## மழையால் காபி பழங்கள் வெடிப்பு

தாண்டிக்குடி : தாண்டிக்குடி மலைப்பகுதியில் தொடர் மழையால் காபி பழங்கள் வெடிப்பு ஏற்பட்டு உதிர்ந்து வருகிறது. மலைப்பகுதியில் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பில் காபி விவசாயம் செய்யப்படுகிறது. அக்டோபரில் துவங்கும் சீசன் ஜனவரி வரை நீடிக்கும். தற்போது பருவ மழை தீவிரமடைந்து, கடந்த சில வாரங்களுக்கு முன் கனமழை கொட்டித் தீர்த்தது. சில தினங்களாக மிதமான மழை மாலை நேரத்தில் பெய்து வருகிறது. அவ்வப்போது சுட்டெரிக்கும் வெயில், பனிப்பொழிவு, பின் மழை பெய்வது என சீதோஷ்ண நிலை மாறிய நிலையில் உள்ளது. இதனால் பறிக்கும்

தருவாயில் உள்ள காபி பழங்களில் வெடிப்பு ஏற்பட்டு உதிர்கிறது. இது விவசாயிகளுக்கு இரட்டிப்பு செலவை ஏற்படுத்துகிறது. உதிர்ந்த பழங்களை சேகரிப்பதில் கால விரயமும் உண்டாகிறது. இதுகுறித்து காபி விவசாயிகள் கூறுகையில்: கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து காபி விவசாயம் பாதித்தது. நடப்பாண்டிலும் பூக்கும் தருணத்தில் மழையின்றி மகசூல் பாதியாக குறைந்துள்ளது. காபி விலை ஏற்றம், இறக்கம் காணும் நிலையில் கூலியாட்களின் சம்பளம் அதிகரித்துள்ளது. தொடர் மழையால் பழங்கள் வெடிப்பு ஏற்பட்டு உதிர்கிறது. இதை சேகரிப்பதற்கு கூடுதல் செலவு ஏற்படுகிறது,' என்றனர்.

## வேளாண் விரிவாக்க மையத்தில் நுண்ணூட்ட உரம் விற்பனை

பழநி : பழநிவேளாண் விரிவாக்க மையத்தில் நெல், கடலை, பயறு வகைக்கு தேவையான நுண்ணூட்ட உரம் வினியோகம் செய்யப்படுகிறது. பழநிபகுதியில் நெல்சாகுபடி அதிகளவில் நடைபெறுவதால் விவசாயிகள் ஏக்கருக்கு நுண்ணூட்ட சத்தை 12.5 கிலோ அடியுரமாக 50 கிலோ மணலுடன் கலந்து நடவுக்கு முன்பாக இட வேண்டும். 2.5 கிலோ உரத்தினை திரவகரைசலாக இலைவழி உரமாக இடலாம். துத்தநாக சல்பேட் இடுவதற்கு பதிலாக நெல் நுண்ணூட்ட உரம் இடுவதன் மூலம் இரும்புசத்து, மெக்னீசியம் சத்து, துத்தநாகசத்து ஆகிய சத்துக்கள் கிடைக்கின்றன. பயிர்களின் வளர்ச்சி சமச்சீராகவும், இலைகள் பச்சையம் நிறைந்து பசுமையாக காணப்படும், மணிகள் நன்கு ஊக்கமாகவும், தரமானதாகவும் கிடைக்கும் மகசூலும் அதிகரிக்கும். இதைப்போல நிலக்கடை சாகுபடி செய்யும் விவசாயிகள் நுண்ணூட்டம் இடுவதால் பயிருக்கு போரான், மாங்கனீசு சத்துகள் கிடைக்கின்றன. காய்கள் பொக்கில்லாமல் கிடைக்கும் மகசூல் அதிகரிக்கும். இதை தென்னை

மரங்களுக்கும் பயன்படுத்தலாம். அதற்கு தேவையான போரான், மெக்னீசியம், இரும்பு, துத்தநாக சத்துகள் கிடைக்கும். மரத்துக்கு 1 கிலோ என்ற அளவில் மணலுடன் கலந்து மேலாக இடவேண்டும். இதனால் ஒல்லிகாய்கள் குறைந்து திரட்சியான காய்களும், கொப்புரைச்சத்து அதிகமாகும்.பழநி வேளாண்மை விரிவாக்க மையத்தில் 2500 கிலோ நுண்ணூட்டசத்து, திரவ உயிர் உரங்கள் இருப்பில் உள்ளதால் விவசாயிகள் அரசு நிர்ணயித்த விலையில் வாங்கி பயனஅடையுமாறு பழநி வேளாண் உதவி இயக்குனர் சாந்தாமணி தெரிவித்துள்ளார்.

## நெல் பயிரில் பூச்சி தாக்குதல்

கீழக்கரை : திருப்புல்லாணி வட்டார கிராமப்பகுதிகளில் இவ்வாண்டு 5300 ஏக்கரில் நெல் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஏக்கருக்கு 25 கிலோ யூரியா உரம் போதுமானது. இந்நிலையில் மேல் உரம் இடுவதால் பயிரில் இலைச்சுருட்டு புழுக்களின் தாக்குதலால் மகசூல் பாதிப்புக்குள்ளாகின்றன. இதை தடுக்க வேப்பம்புண்ணாக்கு கலந்து உரமிடலாம். மேலும் தட்டான்பூச்சிகள், சிறு பூச்சிகளை இரையாக உட்கொள்வதால் பூச்சிமருந்து தெளிப்பதை தவிர்க்கலாம், என வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) கீதாஞ்சலி தெரிவித்தார்.

## ரூ.50க்கு கொய்யாபழம்; சிவகங்கையில் விற்பனை

சிவகங்கை : சிவகங்கையில் சரக்கு வாகனங்களில் வைத்து கிலோ ரூ.50க்கு கொய்யா பழங்கள் விற்கப்படுகின்றன. மதுரை மாவட்டம் அலங்காநல்லூர், அழகர்கோவில் மட்டுமின்றி திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் அதிகளவில் கொய்யா பழங்கள் விளைகின்றன. அழகர்கோவில் பகுதியை சேர்ந்த வியாபாரிகள் வாங்கி வந்து,சிவகங்கையில் நடமாடும் கொய்யா

பழக்கடைகளை நடத்தி வருகின்றனர். சுவையாக இருப்பதால் சிவகங்கை மக்கள் இவற்றை அதிகளவில் விரும்பி வாங்குகின்றனர். கிலோ ரூ.50க்கு விற்றாலும் பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். அழகர்கோவில் வியாபாரி பாண்டி கூறுகையில்," அலங்காநல்லூர், அழகர்கோவில் பகுதியில் இருந்து சரக்கு வாகனத்தில் ஒரு டன் கொய்யா பழங்களை வாங்கி வந்து, சிவகங்கை நகரின் முக்கிய வீதிகளில் விற்பனை செய்து வருகிறோம். நல்ல இனிப்பாக இருப்பதாலும், உடலுக்கு கொய்யாப்பழம் நல்லது என்பதாலும் மக்கள் அதிகளவில் விரும்பி வாங்கிச்செல்கின்றனர்," என்றார்.

## <u>புரதச்சத்து குறைபாடு நீக்க வெள்ளாடு வளர்க்க பயிற்சி</u>

ராஜபாளையம் : மக்களிடையே புரதச்சத்து குறைபாடு ஏற்படுவதை நீக்கும் நோக்கத்தில், மகளிர் சுயஉதவிகுழுவினருக்கு வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி ராஜபாளையம் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலையில் அளிக்கப்பட்டது. வெள்ளாட்டு கறியில் புரதச்சத்து அதிகம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு இந்த ஆடு வளர்க்க பயிற்சி அளித்து வருகின்றனர். வெள்ளாட்டு உற்பத்தியை பெருக்குவதன் மூலம், இந்த ஆட்டுகறியை மக்கள் அதிகம் சாப்பிடலாம். இதன் மூலம் புரதச்சத்து குறைபாடு நீங்கும் வாய்ப்பு என்பது இந்த திட்டத்தின் நோக்கம். இந்த திட்டத்தில் விருதுநகர் மாவட்ட அளவில் மகளிர் திட்டம் மற்றும் புதுவாழ்வு திட்ட மகளிர் சுயஉதவி குழுவை சேர்ந்த 72 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுக்கு தமிழக அரசு கால்நடை பராமரிப்பு துறை கால்நடை பல்கலை கழக பயிற்சி மையம் இணைந்து இருநாள் வெள்ளாட்டு வளர்ப்பு பயிற்சி முகாம் ராஜபாளையத்தில் நடத்தின. நூறு சதவீத மானியத்தில் பயனாளிகளுக்கு ஒன்பது பெண்ஆடு மற்றும் கிடா அளிக்கப்படும். ஆட்டுகொட்டம் அமைக்க 10 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. இது தவிர ஆடுகளுக்கு

மூன்று மாதங்களுக்கு தேவைப்படும் அடர்தீவனம் இலவசமாக வழங்கப்படுகிறது. ராஜபாளையம் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலையில், பயனாளிகளுக்கான பயிற்சி சான்றிதழை, கால்நடை பராமரிப்பு துறையின் மண்டல இணைஇயக்குனர்(பொறுப்பு) செல்லச்சாமி நேற்று வழங்கினார். ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்ட உதவிஇயக்குனர் சஞ்சீவிராஜ், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை மைய தலைவர் கதிர்வேல், உதவிபேராசிரியர் சீனிவாசன் கலந்துகொண்டனர்.

**<u>குமரியில் 5162 ஹெக்டேரில் கும்பப்பூ சாகுபடி:</u>**

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் அணை மற்றும் குளத்து பாசனத்தை நம்பி விவசாயிகள் கும்பப்பூ, கன்னிப்பூ என 2 போக சாகுபடிகள் செய்து வருகிறார்கள்.தற்போது வடகிழக்கு பருவமழை கொட்டி தீர்த்ததை அடுத்து பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகள் வேகமாக நிரம்பி வருகிறது. 2000-கும் மேற்பட்ட பாசன குளங்களும் முழு கொள்ளளவை எட்டி உள்ளது. விவசாயிகள் கும்பப்பூ சாகுபடியில் தீவிரம் காட்டி வருகிறார்கள். அஞ்சுகிராமம், மயிலாடி, ஈத்தங்காடு, தேரூர், கொட்டாரம், தெரிசனங்கோப்பு, தக்கலை மற்றும் பல்வேறு பகுதிகளில் நடவு பணி தீவிரமாக நடந்து வருகிறது.விவசாயிகளின் தேவைக்கேற்ப தண்ணீர் சானல்களில் ஷிப்ட் முறையில் திறந்து விடப்பட்டு வருகிறது. குமரி மாவட்டம் முழுவதும் இதுவரை 5162 ஹெக்டேரில் கும்பப்பூ சாகுபடி செய்யப்பட்டுள்ளது.கடந்த ஆண்டு 6561 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டது. இந்த ஆண்டு அதை விட அதிகளவில் சாகுபடி செய்யும் முயற்சியில் அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகிறார்கள். விவசாயிகளுக்கு தேவையான உரத்தை தட்டுப்பாடின்றி வழங்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## முல்லை பெரியாறு அணையின் நீர் மட்டம் 142 அடியை எட்டியது : விவசாயிகள் மகிழ்ச்சி



இடுக்கி : முல்லை பெரியாறு அணையின் நீர் மட்டம் 35 ஆண்டுகளுக்கு பிறகு 142 அடியை எட்டியது. அணையில் 142 அடி வரை நீரை தேக்கிக்கொள்ள உச்சநீதிமன்றம் கடந்த மேமாதம் அனுமதி அளித்தது. இந்நிலையில் நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கன மழை காரணமாக கடந்த சில நாட்களாக அணையின் நீர் மட்டம் வெகுவாக உயர தொடங்கியது. இன்று அதிகாலை இரண்டு மணி அளவில் அணையின் நீர் மட்டம் 142 அடியை எட்டியது. இதனை பொதுப்பணிதுறை அதிகாரிகள் பதிவு செய்து கொண்டனர். இதனால் தேனி , மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் ஆகிய ஐந்து மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பட்டாசும் வெடித்தும் இனிப்பு வழங்கியும் விவசாயிகள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

## உற்பத்தி குறைக்கப்பட்டதால் முட்டை விலை எகிறியது



நாமக்கல்: நாமக்கல்லில் 'தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு' நேற்று கூட்டம் நடந்தது. இதில், முட்டை விற்பனை தொடர்ந்து உயர்ந்து வருவதால், விலையை உயர்த்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, முட்டை விலையில் 9 காசுகள் உயர்த்தப்பட்டு ஒரு முட்டையின் விலை 376 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. உற்பத்தி குறைக்கப் பட்டதால், தேவை அதிகரித்துள்ள நிலையில் முட்டை விலை உயர்ந்து வருவதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கோவக்காய்க்கு கேரளத்தில் நல்ல வரவேற்பு: சாகுபடியில் தேனி விவசாயிகள்**



தமிழக மக்கள் கோவக்காயை விரும்பி உண்ணாத நிலையில், கேரளத்தில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இதனால் கோவக்காய் சாகுபடி பணியில் தேனி மாவட்ட விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். தேனி மாவட்டம் கம்பம் பள்ளதாக்கு பகுதிகளான தென்பழனி, கே.கே.பட்டி, சுருளிபட்டி உள்ளிட்ட சில இடங்களில் மட்டும் கோவக்காய் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. இதனை வாங்க வியாபாரிகள் ஆர்வம் காட்டாததால் சாகுபடி பரப்பரளவு குறைந்தது. அதிக வருவாய் ஈட்டியதால் திராட்சை சாகுபடி செய்ய விவசாயிகள் தீவிரம் காட்டினர். கிராமப்புறங்களில் உள்ள ஆறு, குளம் போன்ற நீர்நிலைப்பகுதி ஓரங்களில் கோவை கொடிகளில் காய் விளைந்து தொங்கும் இதனை பொதுமக்களில் பலர் தொட்டுபார்க்க கூட விரும்புவதில்லை தமிழக மக்களின் உணவு பட்டியலில் இருந்து வெறுத்து ஒதுக்கப்பட்ட கோவக்காய்க்கு கேரள மக்கள் மத்தியில் தற்போது நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இதற்கிடையில் கடந்த ஒரு மாதமாக தேனி

மாவட்டத்தில் பெய்த தொடர்மழை காரணமாக பல நு£று ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த திராட்சை பழங்கள் அழுகி விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் நஷ்டத்தினை ஏற்படுத்தியதால் அவர்கள் கவலை அடைந்திருந்தனர். கேரளத்திற்கு கோவக்காய் தேவை அதிகரிப்பால் அதனை வாங்கி செல்ல அம்மாநில வியாபாரிகள் கம்பம் பள்ளதாக்கு பகுதியில் முகாமிட்டுள்ளனர். இதனால் திராட்சை சாகுபடி செய்து நஷ்டம் அடைந்த விவசாயிகள் சிலரும் கோவக் காயினை சாகுபடி செய்ய தொடங்கியுள்ளனர். இது குறித்து 'தி இந்து' செய்தியாளிடம் கோவக்காய் சாகுபடி செய்த விவசாயி கருப்பையா கூறுகையில், கேரள உணவில் கோவக்காய் அதிகமாக சேர்க்கப்படுகிறது. நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதோடு விலையும் ஒரு கிலோ ரூ.30 வரை போகிறது. இதன் காரணமாக கூடுதலான இடங்களில் கோவக்காய் சாகுபடி செய்யும் பணியில் தேனி மாவட்ட விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் என்றார். கோவக்காய் சாகுபடியில் சாதனைபடைத்த சுருளிபட்டி விவசாயி கணேசன் கூறுகையில், ஒரு ஏக்கரில் சாகுபடி செய்ய ரூ.55 ஆயிரம் முதல் 60ஆயிரம் வரை செலவு ஆகிறது. கொடி வளர்ந்த 90 நாட்கள் பின்னர் 10நாட்களுக்கு ஒருமுறை ஒன்றரை ஆண்டுகளுக்கு காய் பறிக்கலாம். ரசாயன உரங்களை பயன்படுத்தாமல் இயற்கை உரங்களை பயன்படுத்தினால் 30முதல் 35டன் வரை காய்கள் பறிக்க முடியும். செலவு போக ரூ.5 லட்சம் வரை லாபம் ஈட்ட முடியும் என்றார். இவரை 9789618969 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.